# தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்

மலர் : 5 திருவள்ளுவர் ஆண்டு 2018 - மாசி - 30 14-3-1987 இதழ் : 12


## தஞ்சாவூர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் துணைவேந்தர்

"பெண்களின் கல்வி இன்றியமையாமையைப் பாவேந்தர் பாரதிதாசனார் சிறப்பாகப் பாடியுள்ளார். பெண்கள் அந்த இன்றியமையாமையை உணரவேண்டும். ஆன்மிகக் கல்வியோடு அறிவியல் கல்வியையும் பெறுவதே பெண்கள் உயர்வுக்கு வழி வகுக்கும்"

—என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தஞ்சாவூர் அரசினர் மகளிர் கலைக் கல்லூரிப் பட்டமளிப்பு விழா சிறப்புரையில் கூறினார்கள்.



பட்டமளிப்பு விழா 2-3-'87 காலை 10 மணியில் கல்லூரிப் பேரவைக் கூடத்தில் நிகழ்ந்தது. பட்டம் பெறுவோர் பேரணியாகக் கூடத்தில் வந்து அமைந்தனர். கல்லூரி முதல்வர் செல்வி தேவலெட்சுமிதேவி வரவேற்புரை நிகழ்த்தி, பட்டமளிப்பு விழா உறுதிமொழி எடுத்துக் கொண்டார். பட்டம் பெறுவோர் துறை வாரியாகப் பட்டம் பெற்றனர். தமிழ்ப் பேராசிரியை திருமதி பா. மங்கையர்க்கரசி நன்றி நவின்றார்.

## தேசிய அறிவியல் நாள்

28-2-'87 சனிக்கிழமை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் தேசிய அறிவியல் நாள் சிறப்புறக் கொண்டாடப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகக் கருத்தரங்கக் கூடத்தில் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் விழா நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். சிற்றூர்களில் அறிவியல் விழிப்புணர்வை உண்டுபண்ணவும், பள்ளி மாணவர்களுக்கு அறிவியல் செய்திகளைத் தக்க விதத்தில் எடுத்துரைக்கவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் சில திட்டங்களை மேற்கொள்ள இருப்பதாகக் குறிப்பிட்டார்.



பூண்டி புட்பம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் கோவிந்தசாமி அவர்கள் 'இராமன் விளைவு' பற்றியும், தஞ்சை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் நரேந்திரன் 'அறிவியலால் ஏற்படும் நன்மைகள்' பற்றியும் தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியல் களஞ்சியப் பதிப்பாசிரியர் திரு செந்தமிழ்க்கோதை 'அறிவியலால் விளையும் தீமைகள்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

திரு பத்மநாபன், பேராசிரியர் சர்மா ஆகியோர் கணிப்பொறி வழி இயங்கும் இன்னிசைக் கருவிகளை இயக்கி அவற்றின் செயல்திறனை விளக்கினர்.

இதன் சார்பாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெற்ற கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டிகளில் தஞ்சையிலுள்ள 11 உயர்நிலைப் பள்ளிகளும், நாடகப் போட்டியில் 5 பள்ளிகளும், கல்லூரி மாணவர்களுக்காக 'இந்தியாவின் அறிவியல் சாதனை' என்ற தலைப்பின்கீழ் நடத்திய வினாடிவினாப் போட்டியில் 8 கல்லூரிகளும் பங்கேற்றன. வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குத் துணைவேந்தர் பரிசுகளை அளித்துப் பாராட்டினார். கூட்டத்திற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேராசிரியர் விக்டர் இராஜமாணிக்கம் உரையாற்றினார். முனைவர் இராம. சுந்தரம் நன்றி கூறினார்.

## 'பெரிய புராணம் – ஓர் ஆய்வு' நூல் வெளியீட்டு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையத்தின் பன்னிரு திருமுறை ஆய்வுக்கட்டில் பேராசிரியர், அ.ச. ஞானசம்பந்தன் அவர்களால் எழுதப்பட்ட 'பெரியபுராணம் – ஓர் ஆய்வு' என்னும் நூல் வெளியீட்டு விழா துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் 20-2-'87 வெள்ளி மாலை 5 மணியில் காஞ்சிபுரத்தில் நிகழ்ந்தது.




தமிழ் நாட்டரசு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு வி.வி.சாமிநாதன் அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்பிக்க, பன்னிரு திருமுறை அறக்கட்டளை நிறுவநர் திரு கே.கிருட்டிணசாமிப்பிள்ளை அவர்கள் முதற் படியைப் பெற்றார்.

திருப்பனந்தாள் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ கயிலை மாமுனி காசிவாசி சுவாமிகள், காஞ்சிபுரம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் அருளுரை வழங்க, செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி.பாண்டியன், இ.ஆ.ப. அவர்களின் வாழ்த்துரையுடன் விழா இனிது நிறைவேறியது.

காஞ்சிபுரம் தத்துவமைய இயக்குநர் முனைவர் கூ.ரா.நஞ்சுண்டன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பேரா.அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் பாராட்டிற்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

–தத்துவமையம், காஞ்சிபுரம்.

## அறிவியல் சொற்பொழிவுகள்

தேசிய அறிவியல் நாள் தொடர்பாக அறிவியல் சொற்பொழிவுகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்து நடத்தியது. திருவையாற்றில் 24-2-'87 அன்று திருமதி செயராணி ராசதுரை அவர்கள் 'சமூகநலக் காடுகள்' பற்றியும் 25-2-'87 அன்று தாராசுரத்தில் டாக்டர் வீரமணி அவர்கள் 'நெடிய வாழ்வும் பல் பாதுகாப்பும்' பற்றியும் 26-2-'87 அன்று வடுவூரில் டாக்டர் செகதீசன் அவர்கள் 'குழந்தைகளுக்குப் பரவும் தொற்றுநோய்கள்' பற்றியும் உரையாற்றினர்.

## பேரா. ஜ. சாதிக் அவர்களுக்குப் பாராட்டு

சீலங்கா நாட்டு அரசின் 'மெடிசினா ஆல்டர் நேட்டிவா' என்னும் நிறுவனம் தமிழ்ப் பல்கலைக் கழகச் சித்த மருத்துவத் துறைப் பேராசிரியர் முனைவர் ஜ.சாதீக் அவர்களுக்கு டி.எஸ்சி பட்டம் டென்மார்க்-கோபன்ஹேகன் பல்கலைக் கழகச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் வழங்கவிருப்பதைப் பாராட்டி அறிவியற் புலத்தார் தேநீர் விருந்தளித்தனர். துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தலைமையேற்றுப் பாராட்டுரை வழங்கினார்கள்.

–அறிவியற் புலம்

## பேரா. கே.எம். வேங்கடராமையா அவர்களுக்குப் பிரியாவிடைப் பாராட்டு

தமிழ்ப் பல்கலைக் கழகக் கையெழுத்துச் சுவடித் துறைப் பேராசிரியராக ஐந்தாண்டு ஒரு திங்கள் பணியாற்றிய முதுபெரும் புலவர் பேரா.கே.எம். வேங்கடராமையா 24-2-'87-இல் பணியை முடித்தார்.

அன்று மாலை தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகப் புல விருந்தகத்தில் சிற்றுண்டி விருந்தும் பிரியாவிடைப் பாராட்டு நிகழ்ச்சியும் நிகழ்ந்தன.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தலைமையேற்றுப் பிரியாவிடை பெறும் பேராசிரியருக்குப் பொன்னாடைபோர்த்தி, கத்தூரி மாலை அணிவித்து, கையெழுத்துச் சுவடித் துறையினர் சார்பில் மேசை மணிப்பொறி ஒன்றினை நினைவுப் பரிசாக வழங்கிப் பாராட்டிப் பெருமைப்படுத்தினார்கள்.

பிரியாவிடை பெற்ற பேராசிரியர் தம் பணிக்காலத்தில் மோடி ஆவணங்களைக் கொண்டு ஆய்ந்து 'மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்', 'மராட்டியர் மன்னர் வரலாறு' என்னும் இரண்டு நூல்களையும் உருவாக்கினார்.

பாராட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்த கையெழுத்துச் சுவடித்துறைப் பேராசிரியர் முனைவர் பா. சுப்பிரமணியம் வரவேற்புரை கூற, புலவர் செ.இராசு நன்றி நவின்றார்.

## 1885 – இல் வெளியான அரிய கால்நடை மருத்துவ நூல்

ஜேம்ஸ்மில் என்பவரால் எழுதப்பட்ட 'The Indian Stock Owner's Manual' என்ற ஆங்கில நூல் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரால் தமிழில் "இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புத்தகம்' என்று மொழிபெயர்க்கப்பட்டது. இந்தியாவிலுள்ள கால்நடைகளின் நோய்களைப் பற்றிய தெளிவான குறிப்புகள் இதில் உள்ளன. 238 பக்கங்கள் கொண்ட இந்நூல் 1885–இல் நேஷனல் அச்சகத்தாரால் அச்சிடப்பட்டது. விலை உரூ.2/–

–நூலக இயக்குநர்.

## கணிப்பொறிவழி திருக்குறளாய்வு

ஒரு முறை பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்
ஙீ
ஙு

அதிக முறை பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்து
"ன்" – 1705 முறைகள்

திருக்குறளில் பயன்படுத்தப்படாத எழுத்துக்கள்

ஔ, ஙா, ஙி, ஙீ, ஙு, ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ, ஙௌ, சௌ, ஞி, ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞொ, ஞோ, ஞௌ, டௌ, ணௌ, தௌ, ஙை, நை, நௌ, பௌ, மௌ, யௌ, ரௌ, லௌ, வௌ, ழீ, ழூ, ழெ, ழே, ழோ, ழௌ, ளோ, ளௌ, றௌ, னௌ.

(மொத்த எழுத்துக்கள் –43)

–கணிப்புமையம்,
(கணிப்பொறி வழி அறியப்பட்ட செய்திகள்)

## இசைக் கலைஞர் கவனத்திற்கு

வாய் அதிகம் திறந்து பாடுதல்,
பல் வெளியே தோன்றப் பாடுதல்,
அழுகை முகங்காட்டிப் பாடுதல்,
கண்கள் அங்குமிங்குமாக அலையப் பாடுதல்,
கண் இமைகளை அடிக்கடி இமைத்துப் பாடுதல்,
வயிறு குழிவாங்கப் பாடுதல்,
கழுத்து நரம்பு வீங்கப் பாடுதல்,
தலையை அதிகம் அசைத்துப் பாடுதல்

ஆகியவை குற்றமெனப் பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்கின்றன.(கல்லாடம் 21:35–39, சீவக சிந்தாமணி 658, திருவிளையாடற் புராணம் 41:29).

ஆடற்கலை புரிவோர்க்கு முக அழகும் உடல் அழகும் வேண்டப்படுவன போல் இசைக் கலைஞர்க்கு இவ்வழகுகள் முதன்மையாகக் கொள்ளப்படுவதில்லை. ஆனாலும், இசை நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் இன்புறுவோரது நுகர்வுணர்ச்சிக்காகப் பாடகர்கள் சில உடற்றொழிற் குற்றங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பது தமிழர் கண்ட நாகரிக இலக்கணமாகும்.

–ஞானா குலேந்திரன், இசைத்துறை.

## 'கவிதை' என்னும் சொல்

'கவிதை' என்னும் சொல்லாட்சியை முதன் முதலாகப் பரிபாடலில் காண்கின்றோம். ஆசிரியர் நல்லந்துவனார்,

"மாசில் பனுவற் புலவர் புகழ்பல
நாவிற் புனைந்த நன்கவிதை"
–பரிபாடல் 6:7,8.

என்று பாடியுள்ளார்.

இதிலுள்ள 'கவிதை' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர்,

"கவிதை – கவியது தன்மை" என்ற பொருள் சுட்டி,
"அஃது ஈண்டு செய்யுள் மேல் நின்றது" என்று விளக்கினார்.

அக்காலத்தில் 'கவியது தன்மை' -என்ற பொருளே கவிதைக்கு வழங்கியுள்ளது என்பதையும் ஆகுபெயராகிச் செய்யுளைக் குறித்தது என்பதையும் அறிகிறோம்.

–கோவை. இளஞ்சேரன்.

## நூறு ஆண்டானாலும் தமிழ்

இலங்கை யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் மறைத்திரு தந்தை ஞானப்பிரகாசர் ஓ.எம்.ஐ. வாழ்ந்தார். அவருக்கு 76 மொழிகள் தெரியும். 16 மொழிகளில் நல்ல புலமை உடையவர். 80–ஆவது அகவையில் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார்.

22–4–1941 மாலை 7 மணியில் அவர் இல்லத்தில் பின்வரும் அறிஞர்கள் உவப்பத் தலைக்கூடினர்: மறைத்திரு தந்தை ஞானப் பிரகாசர், யாழ்ப்பாணம் பேரா. அம்பிகை பாகன், யாழ்ப்பாணம் பண்டித கணபதிப் பிள்ளை, அண்ணாமலைநகர் பேரா. எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் கு. சீநிவாசன் (இந்நாள் தமிழ்ப் பல்கலைக் கழக அறிவியல் துறைப் பேராசிரியர்).

உரையாடலில் ஒரு முத்து:

கு. சீநிவாசன் :– தந்தை அவர்களே! தங்களுக்கு 82 அகவை ஆகிறது. தாங்கள் 100 ஆண்டுகள் வாழ்வதாக ஆண்டவன் அருள் இருக்குமானால் இன்னும் 18 மொழிகளைக் கற்றுக் கொள்வீர்களா?

தந்தை ஞானப் பிரகாசர் – ஓம்! என்ன! நல்ல கேள்வி! நாம் கடைசியாகக் கற்றுக்கொண்ட மொழி தமிழ். அவனருளால் நாம் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்வதானாலும்கூட இத்தமிழ் மொழியையேதான் பயில்வோம். நம் தமிழ் அத்தனை இனியதாயிற்றே!

செய்தி அறிவிப்பவர்: கு. சீநிவாசன்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவண் 15033/82X7

இ.அ.அ. மட்டும்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007.
தமிழ்நாடு - இந்தியா.

## தமிழில் எட்கர் தர்ஸ்டனின் இனவியல் ஆய்வு நூல்

ஆங்கில அறிஞரான எட்கர் தர்ஸ்டன் சென்னை அருங் காட்சியகத்தின் கண்காணிப்பாளராக 1885 முதல் பணியாற்றினார். அப்பணியுடன் தென்னிந்திய இனவியல் ஆய்வுப் பணியையும் ஏற்றுக்கொண்டார். தென்னாட்டில் மலையின மக்கள், பிற இனக்குடிகள் பற்றித் தனித்தனியே ஆராய்ந்தார். ஏறத்தாழ 2000 இனத்தவரைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து 7 தொகுதிகளாக 1909-இல் வெளியிட்டார்.

'Cast and Tribes of Southern India' என்னும் அந்நூல் தமிழில் மொழிபெயர்ப்பாக வெளிவரத் தமிழ்ப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு மொழிபெயர்ப்புப் பணியைப் பேரா. க. இரத்னம் அவர்களிடம் ஒப்படைத்தது. ஏழு தொகுதிகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. முதல் தொகுதி பதிப்பாகியுள்ளது. எஞ்சியவை தொடர்ந்து பதிப்பாக உள்ளன.

## பதிப்பில் உள்ள நூல்கள்

1. சங்க இலக்கியத் தாவரங்கள்
2. சட்டத்தமிழ் அகராதி
3. மரஇனப் பெயர்த் தொகுதி-2
4. சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களின் சிற்பங்களும் ஓவியங்களும்
5. கேரளத் தமிழர்களும் அவர்தம் சிக்கல்களும்
6. திருவருட்பயனும் அருண்முறைத் திரட்டும் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)
7. புதையல் தேடிக் கடலில் மூழ்குதல்
8. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் -தொகுதி-2
9. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-4
10. பாரதியார் பாடல்கள்-ஆய்வுப் பதிப்பு (அரசு உதவிப் பதிப்பு)

## தமிழ்ப் பல்கலைக் கழக நூல் வெளியீடுகள் விலை குறைக்கப் பட்டுள்ளன

இலக்கியம், இலக்கணம், மொழியியல், அறிவியல், மருந்தியல், சட்டவியல், பொறியியல், வரலாறு, திறனாய்வு, கலை, ஆன்மிகம், அகராதி முதலிய பலதுறை நூல்களும், கிடைத்தற்கரிய நூல்களின் மறுபதிப்புமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இதுவரை 76 நூல்கள் வெளிவந்துள்ளன.

இவை, 1-3-1987 முதல் விலை 30% குறைக்கப் பட்டுள்ளன.

கழிவு: 15% அஞ்சற் செலவு தனி.

## களஞ்சிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| அறிவியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு.300/- |
| வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி-1 | உரு.300/- |
| " " | தொகுதி-2 | உரு.300/- |
| " " | தொகுதி-3 | உரு.300/- |
| சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் | தொகுதி-1 | உரு.250/- |
| " | தொகுதி-2 | உரு.250/- |

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி.

## புதிய வெளியீடுகள்

| வெளியீட்டு எண். | | புதிய விலை உரு. |
|---|---|---|
| 69. | தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு -கே.எம்.வேங்கடராமையா | 145/- |
| 71. | தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள் -புலவர் செ.இராசு | 84/- |
| 75. | பெரியபுராணம் ஓர் ஆய்வு -அ.ச.ஞானசம்பந்தன் | 73/- |
| 76. | சூரிய ஆற்றலும் பயன்களும் -மெ.மெய்யப்பன் | 15/- |

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.